# முயற்சியாண்மைக்கல்வி

**04**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டை விடைகள்

## தரம் 10

## முயற்சியாண்மையும் சிற்றளவு வணிகமும்

**(1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ② | 6. | ① | 11. | ④ |
| 2. | ② | 7. | ③ | 12. | ② |
| 3. | ③ | 8. | ① | 13. | ④ |
| 4. | ② | 9. | ② | 14. | ② |
| 5. | ③ | 10. | ② | 15. | ③ |

**(2)**

1. ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களையும் குறைந்த முதலீட்டையுடைய தனியார் உரிமையின் கீழ் சுயாதீனமாக வழிநடாத்தப்படும் வணிகம் சிற்றளவு வணிகமாகும்.

2.

- சிறிய தொகை மூலதனமாக இடப்பட்டிருத்தல்.
- வணிகமானது தனி ஒருவருக்கு உரிமையாகக் காணப்படும்.
- வணிக நடவடிக்கைகள் சிறிய பிரதேசத்திற்கு மட்டும் வரையறைக்கப்பட்டிருத்தல்
- ஊழியர்களின் எண்ணிக்கையில் குறைவாகக் காணப்படல்.
- தீர்மானம் எடுப்பதில் உள்ள இலகு நிலை

3. முயற்சியாளர்கள் புத்தாக்கங்களை உருவாக்குகிறனர். சிறிய அளவில் ஒரு தொழிலைத் தொடங்குவது, அவரது ஆக்கப்பூர்வமான யோசனைகளை பரிசோதிக்கவும், சந்தை இடைவெளிகளை எளிதாகக் கண்டறிந்து புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்கவும் அனுமதிக்கிறது. இன்று காணப்படுகின்ற பல பாரியளவிலான வணிகங்கள் ஆரம்பத்தில் சிறு வணிகங்களாகவே ஆரம்பிக்கப்பட்டவையாகும்.

COMMERCE & BUSINESS STUDIES

4.

1) நாட்டில் வேலைவாய்ப்பு அதிகரிப்பதன் மூலம்
2) வருமானப் பங்கீட்டின் சமத்துவமின்மையைக் குறைப்பதன் மூலம்
3) காலப்போக்கில் பாரிய அளவிலான வணிகமாக மாற்றுவதன் மூலம்
4) தேசிய உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம்
5) பெரிய வணிகங்கள் வழங்காத பொருட்களை வழங்குவதன் மூலம்
6) உள்ளூர் அறிவு மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம்

5.

1) முதலீட்டைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் மட்டுப்படுத்தப்படல்.
2) நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு காணப்படாமை.
3) சந்தை வரையறுக்கப்பட்டிருத்தல்,
4) வணிக நடவடிக்கைகளில் குடும்ப உறுப்பினர்களின் தேவையற்ற தலையீடு அதிகரித்தல்
5) வணிக உரிமையாளரின் அறிவு மற்றும் வணிக அனுபவம் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.

6.

1) மிகச் சிறிய மூலதனத்தில் வணிகத்தை ஆரம்பிக்க முடிதல்.
2) சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப இலகுவாக ஈடுகொடுக்க முடிதல்.
3) ஊழியர்களை அணைத்துக்கொள்ளலும் பயிற்சியளிப்பதும் இலகுவாதல்.
4) ஊழியர்கள் அதிக சலுகைகளை எதிர்பார்க்காமை

7.

1) வணிக செயற்பாடுகளைச் சிறப்பாக திட்டமிடல்
2) நிபுணர்களிடமிருந்து தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்
3) கொடுக்கல் வாங்கல்களை சரியாக அறிக்கைப் படுத்தல் .
4) வெளிப்புற சூழலில் ஏற்படும் மாற்றங்களை இனங்கண்டு அதற்கேற்ப துலங்கல்
5) சிறந்த மனித உறவுகளைப் பேணுதல்.

COMMERCE & BUSINESS STUDIES

8.

1) உரிமையாளரின் வகிபங்கு

2) தலைவரின் வகிபங்கு

3) முகாமையாளரின் வகிபங்கு

9.

1) தொழில்நுட்ப திறன்கள்

2) மானிடத் திறன்கள்

3) எண்ணக்கரு ரீதியான திறன்கள்

4) தொடர்பாடல் திறன்

5) ஆலோசனை திறன்

6) குழுவாக வேலை செய்யும் திறன்

10. முயற்சியாளர் என்பவர் எப்போதும் புத்துருவாக்கத்தில் ஈடுபடுபவராவர். எனவே புதப் பொருட்களை உருவாக்குவதற்கும்இ புதிய சந்தை வாய்ப்புக்களை தேடியறிவதற்கும் வணிகப்போட்டியை தெிர்கொள்வதற்கும் எண்ணக்கரு ரீதியான திறன்கள் அவசியமாகும்.

COMMERCE & BUSINESS STUDIES